# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 02
ශ්‍රී ලංකාව
දුරකථන :- 011-2334400/011-2135400
ෆැක්ස් :- 011-2337777

செயலகம்
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு 02
இலங்கை
தொலைபேசி :- 011-2334400/011-2135400
பக்ஸ் :- 011-2337777

Secretariat
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 02
Sri Lanka
Telephone :- 011-2334400/011-2135400
Fax :- 011-2337777
E-Mail : cgir@ird.gov.lk Web: www.ird.gov.lk


**SEC/2023/E/02** **06.04.2023**

**ஊழிய வருமானத்தை கணிப்பதில் காசற்ற நன்மைகளுக்கு பெறுமதிகளை அளவீடு செய்தல்**

இச் சுற்றறிக்கையானது, ஊழியர் ஒருவரது ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை பெறுமதியாக்கல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் அனுமதியுடன் FP/R/01/05/07/05-2023 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரி செயலாளரின் அறிவுறுத்தல்களின் மேல், FP/01/01/05/09-2022 ஆம் இலக்க 2023.03.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திறைசேரி செயலாளரின் சார்பில் நிதி கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகரிக்கபட்டவாறான மாற்றங்களுடன் வழங்கப்படுகின்றது.

இச் சுற்றறிக்கை 2023, ஏப்பிரல் 01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

2023, ஏப்பிரல் 01 ஆம் திகதி முதல் எந்தவொரு மாதத்திற்கும், ஓர் ஊழியரின் ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களை கணிப்பதில், ஊழியத்திலிருந்தான அத்தகைய ஊழியரினால் பெறப்பட்டவுள்ள அல்லது ஈட்டப்பட்டவுள்ள நன்மைகளாக உள்ளடக்கப்படவுள்ள தொகைகள் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளது

## 1. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட கம்பனி பங்குகளின் பெறுமதி

எவரேனும் ஊழியர் ஒருவருக்கு ஏதேனும் பங்கினை பங்கீடு செய்வதிலிருந்து அல்லது ஏதேனும் பங்குகளைக் கொள்வதற்கான விருப்பு தெரிவொன்றிலிருந்து அத்தகைய ஊழியருக்கு ஓர் தொழில்வழங்குநரின் ஒன்றுதிரட்டப்பட்ட ஏதேனும் நன்மைகளின் "பெறுமதி" என்பது: பங்குகளுக்காக ஊழியரின் உதவுத் தொகையினால் குறைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இருப்பின், மேலதிக, ஊழியர் பங்குதிட்டமொன்றின் கீழ் அந்நேரத்தில் பங்கீடு செய்யப்பட்ட பங்குகளின் சந்தைப்பெறுமதி எனப் பொருள்படும்.

## 2. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிட நன்மைகளின் பெறுமதி

(அ) ஏற்புடைய சந்தர்ப்பங்களில் தொழில் வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடத்தின் ஏதேனும் நன்மையின் பெறுமதியானது கீழே குறிப்பிடப்பட்ட பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

| விவரணம் | ஏற்புடைய மாதத்திற்கான குறிப்பிடப்பட்ட தொகை | | |
|---|---|---|---|
| | உள்ளூர் அதிகார சபைகளினால் வரி அறவிடப்படும் வரி மதிப்பிடப்பட்ட பிரதேசத்தில் | உள்ளூர் அதிகார சபைகளினால் வரி அறவிடப்படாத வரி மதிப்பிடப்படாத பிரதேசத்தில் | தோட்ட பங்களாக்கள் |
| வதிவிடம் தொழில்வழங்குநரினால் (தளபாடங்களுடன்/ தளபாடங்கள் அற்று) வழங்கப்பட்டது | ஏற்புடைய மாதத்தின் ஏற்புடைய ஊழியரின் சம்பளத்தின் 12.5% | ஏற்புடைய மாதத்தின் ஏற்புடைய ஊழியரின் சம்பளத்தின் 10 % | ஏற்புடைய மாதத்தின் ஏற்புடைய ஊழியரின் சம்பளத்தின் 7.5% |

இச் சுற்றறிக்கையின் தேவைப்பாட்டிற்கு, **சம்பளமானது** 'விதவைகள் மற்றும் அநாதைகள்' ஓய்வூதியத் திட்டத்தின் (W&OP) அல்லது சேமலாப நிதியத்தின் கழிப்பனவிற்காக கருத்தில் கொள்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தொகை என பொருள்படும். ஏனைய சந்தர்ப்பங்களுக்கு சம்பளமானது ஏற்புடைய ஊழியத்திலிருந்தான அத்தகைய ஊழியருக்கு பணமாக

பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் எனப் பொருள்படும்.

(ஆ)2 (அ) இல் குறிப்பிடப்பட்ட பெறுமதியானது தொழில்வழங்குநரினால் உறப்பட்ட செலவினம் அல்லது வதிவிடத்தின் சந்தைப் பெறுமதியை விட அதிகமாக காணப்படுமாயின், இவற்றுள் குறைவான தொகையானது, அத்தகைய தேவைப்பாட்டிற்கு அத்தகைய ஊழியரின் நன்மையின் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(இ)மாதாந்த படியாக, ஊழியர் குடியிருக்கும் வீடு அல்லது தொடர்மனையுடன் தொடர்புடைய, ஊழியரினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களை தொழில்வழங்குநர் மீளளிப்பாராயின் அல்லது ஊழியருக்கு ஏதேனும் தொகையை செலுத்துவாராயின், நன்மையின் பெறுமதியானது, தொழில்வழங்குநரினால் மீளளிக்கப்பட்ட உண்மையான செலவினமாக அல்லது செலுத்தப்பட்ட படியாக இருத்தல் வேண்டும்.

(ஈ) வதிவிடமொன்றை வழங்கியமைக்காக அல்லது வாடகையாக ஊழியர் ஒருவரின் சம்பளத்திலிருந்து ஏதேனும் தொகையொன்று கழிக்கப்படுமாயின், ஊழிய நன்மையானது, மேலே 2 (அ), (ஆ) அல்லது (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நன்மையின் ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட தொகையின் குறைக்கப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டும்.

**3. தொழில்வழங்குரினால் வழங்கப்பட்ட பயணம், போக்குவரத்து அல்லது அது தொடர்பான வசதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நன்மைகளின் பெறுமதியை அளவீடு செய்தல்**

தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பகுதியளவில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தின் ஏற்பாட்டிலிருந்தான நன்மைகளின் பெறுமதி அல்லது அத்தகைய வாகனத்தின் ஏற்பாட்டிற்கு பதிலாக செலுத்தப்பட்ட [கீழே பந்தி(ஆ) மற்றும் (இ) என்பவற்றுக்கு] ஏதேனும் படியின் கூட்டுத்தொகை பின்வருமாறு அளவீடு செய்யப்படும்

(அ) தொழில்வழங்குநரால் வழங்கப்பட்ட எந்தவொரு மோட்டார் வாகனத்தினதும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான (பகுதியளவிலான) நன்மையின் பெறுமதி.

| **வாகனத்தின் வகை** | **ஏற்புடைய மாதத்திற்கான குறிப்பிடப்பட்ட தொகை (ரூபா)** | | |
|---|---|---|---|
| | **வாகனம்** | **சாரதி** | **எரிபொருள்** |
| எந்தவொரு வாகனமும் | 20,000 | 10,000 | 20,000 |

(ஆ) எவரேனும் ஊழியர் ஒருவருக்கு வாகனம் ஒன்று (முழுவதுமாக அல்லது பகுதியளவில்) வழங்கப்பட வேண்டிய தேவைப்பாட்டுடன் அரசாங்கத்தினால் அதுசார்பாக வழங்கப்பட்ட எந்தவொரு சுற்றறிக்கை, உத்தரவு அல்லது ஒழுங்குவிதிகளின் கீழ் உரித்துடைய எரிபொருளுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கான தேவைப்பாடு உள்ள இடத்து, அத்தகைய சுற்றறிக்கை, உத்தரவு அல்லது ஒழுங்குவிதியின் கீழ் ஊழியருக்கு உரித்துடைய எரிபொருள் அளவின் 25% இற்கு சாற்றப்படத்தக்க தொழில்வழங்குநரினால் உறப்பட்ட செலவினத்தின் அத்தகைய பகுதியானது, உள்ளடக்கப்பட வேண்டிய நன்மையின் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(இ) நன்மையின் பெறுமதியானது, முதன்மை ஊழியம் மற்றும்/ அல்லது இரண்டாம் ஊழியத்திலிருந்தான – சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் - ஒரு வாகனத்திற்கு மட்டும் மேலே 3 (அ) இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அளவீடு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) ஊழியர் ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனத்திற்கு எரிபொருள் வழங்குமிடத்து, முதன்மை ஊழியம் மற்றும்/அல்லது இரண்டாம் ஊழியத்திலிருந்தான – சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் - ஒரு வாகனத்திற்கு மட்டும் 3(இ) ஆம் பந்தி பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(உ) அனைத்து மேலதிக வாகனங்களுக்கும், தொழில்வழங்குநர்/ தொழில்வழங்குநர்களினால் வாகனம் மற்றும் எரிபொருளுக்காக உறப்பட்ட மொத்த செலவினமானது, உள்ளடக்கப்பட வேண்டிய நன்மையின் பெறுமதியாக இருத்தல் வேண்டும். அத்தகைய மேலதிக வாகனம்/ங்களின் செலவினம் பெறப்படமுடியாதவிடத்து, ஒத்தவகையான வாகனத்திற்கான மாதாந்த செயற்பாட்டு குத்தகை கொடுப்பனவின் சந்தைப்பெறுமானமானது [கன சென்றிமீற்றர்களில் (CC) அதே அல்லது அண்ணளவாக அது போன்ற கொள்ளளவைக் கொண்ட வாகனம் அடங்கலாக] மாதம் ஒன்றுக்கு அத்தகைய நன்மையின் பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(ஊ) ஏதேனும் மோட்டார் சைக்கிளது தனிப்பட்ட பயன்பாட்டிலிருந்து ஊழியர் ஒருவருக்கான நன்மையின் பெறுமதியானது (முழுவதுமாக அல்லது பகுதியளவில்) -

i. தொழில்வழங்குநரின் கணக்கில் தொழில்வழங்குநரினால் எரிபொருள்

வழங்கப்பட்டிருப்பின் (இயந்திரத்தின் வினைதிறனை பொருட்படுத்தாது) மாதம் ஒன்றுக்கு ரூபா 5,000 ஆக இருத்தல் வேண்டும்;

ii. தொழில்வழங்குநரினால் எரிபொருள் வழங்கப்படாதிருப்பின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) மாதம் ஒன்றுக்கு ரூபா 3,000 ஆக இருத்தல் வேண்டும்

(எ) கீழ்வருவனவற்றின் தனிப்பட்ட பாவனைக்கான நன்மையின் பெறுமதி -

i. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்டு, கள வேலைகளுக்காக பயன்படுத்தும் ஏதேனும் மோட்டார் வாகனம் பயன்படுத்துமிடத்து, தொழில்வழங்குநரினால் அப்பாவனைக்குரிய சரியான பதிவுகள் பராமரிக்கப்படின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) அத்தகைய காசற்ற நன்மையானது, ஒரு கிலோ மீற்றருக்கு ரூபாய் 25 ஆக கொள்ளப்படுதல் வேண்டும் ஆயினும் அது மாதம் ஒன்றுக்கு ரூபா 20,000/- இனை விஞ்சுதல் ஆகாது;

ii. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார்சைக்கிள் பயன்படுத்துமிடத்து, தொழில்வழங்குநரினால் அப்பாவனைக்குரிய சரியான பதிவுகள் பராமரிக்கப்படின், (இயந்திரத்தின் வினைத்திறனை பொருட்படுத்தாது) அத்தகைய காசற்ற நன்மையானது, ஒரு கிலோ மீற்றருக்கு ரூபாய் 5 ஆக கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஏ) ஊழியரிற்கு சொந்தமான ஏதேனும் மோட்டார் வாகனம் அல்லது மோட்டார்சைக்கிளின் எரிபொருள் அல்லது பராமரிப்பு தொடர்பில் ஏதேனும் செலவினங்கள் தொழில்வழங்குநரினால் உறப்பட்டால் அல்லது மீளளிக்கப்பட்டால், ஊழியரின் நன்மையின் பெறுமதியானது உண்மையான செலவினமாக காணப்படும்.

வாகனமொன்றை வழங்கியமைக்காக ஊழியர் ஒருவரின் சம்பளத்திலிருந்து ஏதேனும் தொகையொன்று கழிக்கப்படுமாயின், ஊழிய நன்மையானது, மேலே 2 (அ), (ஆ), (இ) அல்லது (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நன்மையின் ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட தொகையின் குறைக்கப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டும்.

**4. தொழில்வழங்குநரினால் தொடர்பால் வசதிக்காக வழங்கபட்டதின் பெறுமதியை அளவீடு செய்தல்**

அரசாங்கத்தினால் தொடர்பாடல் வசதிக்காக வழங்கப்பட்ட ஏதேனும் சுற்றறிக்கை, உத்தரவு அல்லது ஒழுங்குவிதியின் கீழ் தொடர்பாடல் வசதிகளுக்கான கொடுப்பனவை பெறுவதற்கு உரித்துடைய எவரேனும் ஊழியருக்கு, அத்தகைய கொடுப்பனவிற்கு தொழில்வழங்குநரினால் உறப்பட்ட செலவினத்தின் 25% ஆனது அத்தகைய கொடுப்பனவின் ஊழியரின் நன்மையின் பெறுமதியாக கொள்ளப்படுதல் வேண்டும்.

***5. சலுகை வட்டி வீதங்களில் கடன்கள்***

ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனமொன்று தொழில்வழங்குநர் அல்லது தொழில்வழங்குநர் சார்பில் ஊழியர் ஒருவருக்கு கடன் வழங்கியுள்ளதுடன் அத்தகைய கடன்களின் மீதான வட்டிச் செலவின கொடுப்பனவை முழுவதுமாக அல்லது பகுதியளவில் தீர்ப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு தொழில்வழங்குநர் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அத்தகைய நன்மையானது ஏதேனும் பாகுபாடின்றி தொழில்வழங்குநரின் அனைத்து ஊழியருக்கும் காணப்படுமாயின், ஊழியர் ஒருவரினால் பெறப்பட்ட அத்தகைய நன்மையின் பெறுமதியானது பூச்சியமாக இருத்தல் வேண்டும்.

***6. ஊழியர் ஒருவரின் தொலைபேசி சிட்டைகளின் கொடுப்பனவு***

ஊழியர் ஒருவரினால் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசி அல்லது தொடர்பாடல் சிட்டைகளை தொழில்வழங்குநர் செலுத்துமிடத்து, அவ் ஊழியரினால் பெறப்பட்ட அத்தகைய நன்மையின் பெறுமதியானது தொழில்வழங்குநரினால் மேற்கொள்ளப்பட்ட சிட்டையின் கொடுப்பனவுத் தொகையின் 50% ஆக இருத்தல் வேண்டும்.

***7. தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட ஏனைய பணமற்ற நன்மைகள்***

தொழில்வழங்குநரினால் உறப்பட்ட நன்மையின் செலவினமானது தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட அனைத்து பணமற்ற நன்மைகளுக்கு (1-6 வரையில் கூறப்படாத நன்மைகள்) ஊழியர் ஒருவரினால் பெறப்பட்ட நன்மையின் பெறுமதியாக கருதப்படுதல் வேண்டும். செலவினம் பெறப்படமுடியவில்லை எனில், அதே வகையான நன்மை ஒன்றின் சந்தைப் பெறுமதி, அத்தகைய நன்மையின் பெறுமதியாக கருத்தில்கொள்ளப்படுதல் வேண்டும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

D.R.S. Hapuarachchi
Commissioner General of Inland Revenue
Inland Revenue Department
Sri Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02.